செ.வெ.எண்:51 நாள்:29.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் கள்ளிமேடு தென்னம்புலம், தேத்தாக்குடி தெற்கு, தேத்தாக்குடி வடக்கு ஆகிய பகுதிகளில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவித்ததாவது

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அரசு மருத்துவமனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டும். கண்டிப்பாக வீட்டில் தங்கி சிகிச்சை பெற அனுமதிக்கபட மாட்டாது. குறைந்த பட்சம் 7 நாட்களாவது மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெற வேண்டும். கொரோனா சிகிச்சை பெற்று குணமடைந்தவர்கள் தங்களை 15 நாட்கள் தனிமைப் படுத்தி கொள்ள வேண்டும். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலாளர் மூலமாக அத்தியாவசிய பொருள்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். கொரோனா தொற்று பரிசோதனைக்காக மாதிரி அளித்திருப்பவர்களுக்கு 24 மணி நேரத்திற்குள் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கப்படும். தேவைப்படும் இடங்களில் கோவிட் கேர் சென்டர் அமைக்க அனுமதியளிக்கப்படும்.

பின்னர் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் கீழ் 15 வயதிற்கு மேற்பட்ட முற்றிலும் எழுதவும் படிக்கவும் தெரியாத 5680 கல்லாதோர்களுக்கு 284 மையங்களில் எழுத்தறிவை வழங்கும் வகையில் கற்போம் எழுதுவோம் என்ற இயக்கம் வயது வந்தோர் பள்ளி திட்டமானது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கற்போர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச அடிப்படையிலான மதிப்பீட்டு முகாமினை ஆறுகாட்டுத்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் துணை இயக்குநர் சுகாதாரம் திரு.சண்முகசுந்தரம், மாவட்ட கொள்ளை நோய் தடுப்பு அலுவலர் திரு.லியாகத்அலி, முதன்மை கல்வி அலுவலர் முனைவர் அ.புகழேந்தி, உதவி திட்ட அலுவலர் அ.பீட்டர் பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**